# ஆண்டின் பொதுக்காலம் 25 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு B (20-09-2015)*

## *திருப்பலி முன்னுரை*

அன்புக்குரியவர்களே,

பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் பணிவுடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு கடவுளுக்கு உகந்த பணியாளர்களாக வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. எத்தனை இடையூறுகளும், துன்பங்களும் வந்தாலும் எப்பொழுதும் பிறருக்கு நன்மை செய்பவர்களாக செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம். நீதிமான்களுக்கு எதிராக எத்தனை பேர் சூழ்ச்சி செய்தாலும் கடவுள் அவர்களுக்கு துணை நிற்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். நம்மில் இருக்கும் தீய நாட்டங்களுக்கு இடம் கொடுக்காமல், இயேசுவைப் போன்று கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாய் வாழ நாம் அழைப்பு பெற்றுள்ளோம். நம்மில் யார் பெரியவர் என்ற போட்டியில் நம்மை இழந்துவிடாமல், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் பணியாளர்களாக செயல்படும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**வல்லமையும், திடனும் தரும் தந்தையே இறைவா!,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரையும், இன்றைய உலகில் நாளுக்கு நாள் எழும் சவால்களைக் கண்டு நிலைகுலைந்து விடாது, உறுதியான விசுவாசத்தோடு பணி ஆற்றக் கூடிய அருளை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எம் வாழ்வுக்கு ஆதரவாயுள்ள தந்தையே!**

பல்வேறு நிகழ்வுகள் மூலமாக நீர் எமக்கு எப்பொழுதும் ஆதரவாயிருக்கின்றீர் என்னும் மாபெரும் உண்மையை நாங்கள் உணர்ந்து உமக்கு நன்றி சொல்லுகின்றோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் முன்மாதிரிகையான வாழ்வால் அமைதியை ஏற்படுத்துவோராகவும், இரக்கமும் ~ நற்செயல்களும் கொண்டவர்களாகவும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திடவும், எம் நாட்டு மக்கள் அனைவரும், நீதியின் வழியில் அமைதியை விரும்புபவர்களாக வாழவும், சண்டை சச்சரவுகளுக்கு இடம் கொடுக்காமல் மனித நேயத்தோடு செயல்படவும் தேவையான தூய உள்ளத்தை தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பொல்லாரின் வழிமுறைகளைக் கவிழ்த்து விடுகின்ற தந்தையே!**

உலகில் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் வன்முறையாளர்கள், மற்றும் தலைவர்கள் உண்மையினதும், நீதியினதும் வழிக்குத் திரும்பி அமைதியை ஏற்படுத்துவோராகச் செயற்பட அவர்களை மாற்றியமைத்திட வேண்டுமென்றும், உமது பிள்ளைகளாகிய நாம், வெறுமனே மேலோட்டமான கொண்டாட்டங்களிலும், சடங்காசாரங்களிலும் எமது கவனத்தைச் செலுத்தாது , ஆவியிலும் , உண்மையிலும் வழிபடுகின்ற மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கொடைகள் அனைத்திற்கும் ஊற்றான இறைவா!**

உமது பிள்ளைகளாகிய நாம், வெறுமனே மேலோட்டமான கொண்டாட்டங்களிலும், சடங்காசாரங்களிலும் எமது கவனத்தைச் செலுத்தாது, ஆவியிலும், உண்மையிலும் வழிபடுகின்ற மக்களாக வாழ வேண்டுமென்றும், உம்மால் உருவாக்கப்பட்ட குடும்ப உறவும், அழைப்பும் சவால்களுக்குள் அகப்பட்டுக் கிடக்கும் இவ்வேளையில், ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள கணவனும் ~ மனைவியும் தங்கள் அழைப்பின் உட்பொருளை ஆழமாக உணர்ந்து, உறவுடனும் ~ ஒற்றுமையுடனும் வாழ அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நம்பிக்கையின் ஊற்றாம் இறைவா,**

உலகெங்கும் நீர் செய்து வரும் அற்புதங்களின் மேன்மையால் மக்கள் உமது வல்லமையை உணரவும், நீர் உண்மை கடவுள் என்பதை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளவும் துணைபுரிய வேண்டுமென்றும், எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் தன்னலத்தினைக் களைந்து, சமூக நலத்திலும், எளியவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்களாய் வாழ்ந்து, இறையாட்சிக்குரிய சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நலந்தரும் ஊற்றாம் இறைவா,**

உம்மை நம்பிக்கையோடு தேடி வரும் மக்களின் உடல் நோய்களையும், மன நோய்களையும் முழுமையாக குணப்படுத்தி, மற்றவர்களின் முன்னிலையில் உமது மாட்சிமிகு செயல்களின் சாட்சிகளாக அவர்களை மாற்ற வேண்டுமென்றும், உம் திருமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்குபவர்களாய் வாழும் அருளை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மேலும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நீதியின் நாயகராம் இறைவா,**

உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டு மென்றும், உம் திருவுளத்தை உணர்ந்தவர்களாய், நீதியின் வழியில் நன்மை செய்பவர்களாக வாழத் தேவையான அருள் வரங்களை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மீதும் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.